# புதியயோசனைகளை ஆட்சேபித்து யாழ்குடாநாட்டில்

# நேற்று பூரண ஹர்த்தாலும் உண்ணுவிரதமும்!


விலை ரூபா 1–50

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 14 துல்ஹஜ் 3 இதழ் 160

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-7-1987


[அலுவலக நிருபர்கள் என். கே. துரைசிங்கம், மு. வாமதேவன்]

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பான புதியயோசனைகளை ஏற்குமாறு தமிழ் போராளிகள் குழுக்களை இந்திய அரசு நிர்ப்பந்தித்து வருவதனை கண்டித்தும் புதிய யோசனைகளை ஆட்சேபித்தும் யாழ். குடாநாடு முழுவதும் நேற்று பூரண ஹர்த்தாலும் உண்ணுவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புகளால் நடத்தப்பட்ட இந்த ஆட்சேப நடவடிக்கைகளில் சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், வயோதிபர்கள், மாணவர்கள் உட்பட யாழ்.குடாநாட்டிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். குடாநாடு நேற்று சனநடமாட்டம் எதுவுமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் இப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

பஸ்கள், வாகனங்கள் எதுவும் நேற்று போக்குவரத்து சேவையில் ஈடுபடாமையினால் யாழ் செயலகம் மற்றும் அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கடமைக்கு வரவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை கண்டித்து இன்று ஊர்வலங்கள்

(அலுவலக நிருபர்)

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இரண்டு மாபெரும் ஊர்வலங்கள் இன்று நடாத்தப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டு மக்களால் நடாத்தப்படவிருக்கும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இணுவில் கந்தசாமி கோவி

[5ம் பக்கம் பார்க்க]

ராஜீவ் - ஜே. ஆருக்கிடையே—

# இனப்பிரச்னைத் தீர்வுக்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது!



(நமது விசேஷநிருபர்)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்து முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் நாட்டில் 9 மாகாண சபைகள் நிறுவப்படும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாநிலசபை உருவாகும். இவ்வருட இறுதிக்குள் இதற்குத் தேர்தல் நடக்கும். ஆளுநர், முதலமைச்சர் நியமிக்கப்படுவர். அடுத்த வருட இறுதிக்குள் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். ஜனாதிபதி விரும்பினால் இதற்கான திகதி யெல்லையை நீடிக்கலாம்.



உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

ஆகஸ்ட் 15க்கு முன் அவசரகாலநிலை நீக்கப்படும் ஒப்பந்தம் கைச்சாத்தாகி 48மணி நேரத்தில் போர்நிறுத்தம் அமுலுக்கு வரும். அத்துடன் 72 மணிநேரத்துள் போராளிகள் ஆயுதங்களை இலங்கை அரசின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதனைத்தொடர்ந்து ஐந்து நாட்களுக்குள் ராணுவம் மே 26ம் திகதிக்கு முன்னர் நிலைகொண்டிருந்த முகாம்களுக்கு திரும்பவேண்டும். இவற்றைக் கண்காணிக்க இலங்கை இந்திய அவதானிகள் குழுவும் இந்திய அமைதி காக்கும் படையும் நிறுத்தப்படும்.

மேலும் அரசியல்கைதிகளுக்கும் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சகல கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதுடன் போராளிகளுக்கும் மறுவாழ்வு அளிக்கப்படும்.

ஒப்பந்தப் நிறைவேற்றப்படுவதற்கு உதவி தேவைப்

(5ம் பக்கம் பார்க்க)

பிந்திய செய்தி:

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தீக்கிரை!

(கொழும்பு)

இலங்கை-இந்திய உடன்படிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிக்குமுகமாக ஆர்ப்பாட்டம் நடத்தியோர் தென்னிலங்கையில் பொலிஸ் நிலையம் ஒன்றைத் தாக்கி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கொன்றனர். பொலிசார் இதனையடுத்து மேற்கொண்ட துப்பாக்கிப்

[5ம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்றம் ஏற்காவிடில் உடன் கலைக்கப்படும் – ஜனாதிபதி

(கொழும்பு)

இந்தியபிரதமர் திரு.ராஜீவ் காந்தியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தை பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் பாராளுமன்றத்தை உடன் கலைத்துவிடுவேன்''.

இவ்வாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று இந்தியப்பிரதமருடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை தொடர்ந்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் இந்த ஒப்பந்தத்தை ஒழுங்கான முறையிலும் நேர்த்தியாகவும் செயல்படுத்த தக்க வகையில் பங்காற்றிய இந்திய அரசையும், தமிழக அரசையும் பாராட்டுகிறேன்'' என்றார்.

தென்னிலங்கையில்—

## நேற்றும் ஆர்ப்பாட்டம், வன்முறைகள் 13 பேர் பலி! கொழும்பில் ஹெலி தாக்குதல்

[கொழும்பு]

இலங்கை இந்திய உடன்படிக்கையை எதிர்த்து தலைநகர் கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கை நகரங்களிலும் நேற்று 2-வது நாளாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம் பெற்றதுடன் பெரும் வன்செயல்களும் நடைபெற்றன. இவற்றைக் கட்டுப்படுத்த ஹெலியிலிருந்து கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது குறைந்தது 13 பேர் பலியாகியுள்ளனர் என அஞ்சப்படுகிறது.

நேற்று ஊரடங்குச் சட்டத்தையும் மீறி கொழும்பின் 3 பகுதிகளிலிருந்து 10,000க்கு மேற்பட்ட மக்கள் நகரினுள் பிரவேசித்தனர். இவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பல இடங்களில் தீவிர

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்றும் பரீட்சை இல்லை

(கொழும்பு)

இன்று நடைபெறவிருந்த க. பொ. த. (உயர்தர) பரீட்சைதிட்டமிட்டபடி நடைபெறமாட்டாது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று நடைபெறவிருந்த பரீட்சையும் இன்றையதினம் நடைபெறவிருந்த பரீட்சையும் பிறிதொரு தினத்தில் நடாத்தப்படவுள்ளது. (க)

## ஆயுத ஒப்படைப்பு நடைபெறாது

(கொழும்பு)

“புதிய ஒப்பந்தங்களுக்கு அமைய தமிழ்ப்போராளிகள் அமைப்புக்கள் அனைத்தும் ஆயுதங்களை ஒப்படைத்துவிடமாட்டாது'' என்று நேற்று சென்னையில் தமிழ்போராளிகள் குழுக்களின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளதாக 'வெரித்தாஸ்'வானொலி குறிப்பிட்டது.

## 11 மணிவரை ஊரடங்கு

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் இன்று காலை 11 மணிவரை ஊரடங்குச்சட்டம் அமுலிலிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணி முதல் பிறப்பிக்கப்பட்ட இவ்வூரடங்குச்சட்டம் நேற்று முழுநாளும் அமுலிலிருந்தது. (ஊ)

## போர் பயிற்சி, பிரசாரம் நிறுத்தப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே இணங்கப்பட்டுள்ள இனப்பிரச்னை தொடர்பான புதிய யோசனைகளின் அடிப்படையில், இந்தியாவில் இலங்கைப்

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று விடுமுறை

(கொழும்பு)

இன்று அரசாங்க வங்கி, வர்த்தக விடுமுறையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இவ்அறிவித்தலை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. நேற்றும், அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறையாகப் பிரகடனப் படுத்தப்பட்டது தெரிந்ததே. (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட Honda Chaly C-50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. 'சுப்ப கனன்' இல. 32, ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம். (சி-9989)

புத்தம் புதிய Brother Portable English Type-writer, புதிய Sanyo Car Stereo Cassette Tape-Recorder நல்ல நிலையில் பாவித்துக்கொண்டிருக்கும் Peugeot 404 6 சிறி 2742 இலக்கமுடைய காரும், உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 37, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி 0068)

வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக் குஞ்சுகள். பிறவுண், கறுப்பு சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [சி-0035]

கோவிலுக்கு தேவையான அசையாமணி, குத்துவிளக்கு, திருவாசி, ஸ்தூபி, சருவம், தீபம் சரவிளக்கு, தாம்பாளம், புலோவாஸ், மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், எவசில்வர், பித்தளை அலுமினிய பெரியகிடாரவகைகள், அன்பளிப்புபொருள்கள் ஆகியவற்றிற்கு ஸம்ஸ், 26 B, மானிப்பாய்வீதி, (கிளை) 76/2, கலிபா அப்துல் காதர் வீதி, யாழ்ப்பாணம். (சி 0042)

Sack Lock - 9 C-FT குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. சி. சிவாஜி, 19, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். சி-0092

## 100-வது நாள் நினைவஞ்சலி



**தம்பையா காத்தலிங்கம்**

[கே. ரீ. கே. ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

மலர்வு: 03-11-1949

உதிர்வு: 22-05-1987

அன்பின் திருவுருவாய்
அறிவின் சுடரொளியாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
சிரிப்பின் நிறைமதியாய்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை விட்டு பிரிந்து சென்ற எங்கள் அன்புத் தெய்வமே. நீங்கள் பிரிந்து சென்றாலும் உங்கள் திருவுருவமும் நினைவும் எம் மனதைவிட்டு என்றுமே அகலாது நிலைத்து நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தியடையஇறைவனை பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், தாய், உறவினர்கள்.

சந்தை வீதி,
காங்கேசன்துறை. (சி 0093)

## தேவை

ஸ்ரூடியோ வேலைகளில் அனுவவமுள்ளவர்கள் தேவை. தங்குமிடவசதிகள் கொடுக்கப்படும். காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் [ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த] நாட்களில் நேரில் வரவும். 'நமோஸ்கார்'', டச்சு வீதி, சாவகச்சேரி. சி-9977

## வகுப்புக்கள்

இவ்வருட ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தோர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இவர்களுக்குரிய பரீட்சை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு அதிபர், ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சி-0050)

## கல்வி

5ம் வகுப்பு [6ம் ஆண்டு] புலமைப் பரிசில் பரீட்சை இரண்டு மாதங்கள்பின் போடப்பட்டுள்ளது துரித மீட்டற் பயிற்சி இவ்விரண்டு மாதங்களுக்கும் கற்பிக்கப்படும். விடுமுறை காலங்களில் முற்பகல் 9-00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது. நேரில் வந்து விண்ணப்பிக்கலாம் அன்பமாலைப் பாடசாலை, 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-0070

## தவறிவிட்டது

இல 491130300V சின்னத்துரை குணரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், காரியாலய அடையாள அட்டையும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் தீர்த்தக்கேணிக் கருகாமையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி. குணரத்தினம், நீர்வளச்சபை 601, நவாலர் வீதி, யாழ்ப்பாணம். சி-0089

கதிரவேலு இராசையா, சண்டில் வீதி, கரவெட்டி மேற்கு என்பவரின் 472142-984V இலக்க தேசிய அடையாள அட்டையும், உள்ளூராட்சித்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிமுக அட்டையும் பண்டத்தரிப்பு-மல்லாகம் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பண்டத்தரிப்பு பட்டினசபை அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி-0094

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதி, "தமிழகம்'' ஐச் சேர்ந்த சின்னத்துரை அருள்நாதர் மரணசாசனமின்றி மரணமடைந்தமையால், அவரின் மரணச் சொத்துவிடயமாக.
— மரணமெய்தியவர்

வழ. இல:மரணசொத்து/நிருவாகம்: 4024.

அருள்நாதர் கைம்பெண் நந்தினிதேவி "தமிழகம்'', சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு
மனுதார்.

எதிர்.

பராயமற்றோர்:
1. அருள்நாதர் மகள் சுரேகா—7 வயது.
2. அருள்நாதர் மகள் ரேணுகா—4 வயது.
3. அருள்நாதர் மகள் வேணுகா—3 வயது.

வழக்குப்பாதுகாவலர்:
4. கணேஷ்பிள்ளை ரமேஷ் எல்லோரும் உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
எதிர்மனுதார்கள்.

மேலே உள்ள இலக்கங்கொண்டமரணசாதனவழக்கு, மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின், மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1987ம் ஆண்டு ஆவணி மாதம் 07ம் நாளன்றுமுற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டப்பட வேண்டும் என இத்தால் வேண்டப்படுகின்றார்.

1987ம் ஆண்டு சித்திரை மாதம் 3ம் திகதி.

வரைவு:
லிங்கா துரைராஜா,
மனுதரின் சட்டத்தரணி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

சி-0074

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/6178 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை கிழக்கு பஞ்சாட்சரம் மகள் கமலாசினிக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 61 000/- ரூபாவும் மேலும் இதில் 50,000/- ரூபாவுக்கு 15-6-1985 தொடக்கம் 1-10-86 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 % வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12 % வீத வட்டியும் வழக்குச் செலவு 6310 ரூபா 20 சதமும் விற்பனவுச் சலார்களும் இத்தொகையைப் பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம் 76, ஆஸ்பத்திரி வீதி இராசரத்தினம் சுந்தரமூர்த்தியிடம் பெண் கமலாம்பாளிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1987ம் ஆகஸ்ட் மாதம் 25ந் உ (25-8-1987) முற்பகல் பத்து மணி தொடக்கம் நீதிமன்ற உத்தரவின்படி குறித்த இவ்வாதனத்துக்குப் போக்குவரத்து செய்யும் மேற்கெல்லை பாதையும் ஆஸ்பத்திரி வீதியும் சந்திக்கும் முகப்பில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "முத்தையினான் வளவு கடையடித்திடல் சீமந்திடல் திருவளத்திடல்'', நெற்பரப்பு (23) இருபத்திமூன்று, இதில் நடுப்புறமாக 18-5-1983ல் நில அளவையாளர் எம். நவரத்தினத்தால் தயாரிக்கப்பட்ட 773ம் இலக்கப்படத்தில் 3ஆம் துண்டாகக் காட்டப்பட்ட நெற்பரப்பு [3] மூன்றும் இதற்கு எல்லை கிழக்கு இராசரத்தினம் சிவகுமாரனினுதம், வடக்கு குறித்த படத்தில் 2ம் துண்டுக்காணி, மேற்கு 1ம் துண்டாக்க காட்டப்பட்ட பாதையும் ஈடு கொடுக்கற்காரரினுதனமும், தெற்கு ஈடு கொடுக்கற்காரரினுதனம் இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்,

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (எ-0095)

## விவசாயநிலையம் இடமாற்றம்

பலாலி. வியா.

கீரிமலையில் இயங்கிவந்த விவசாய விஸ்தரிப்பு நிலையம் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து தற்பொழுது அளவெட்டிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய், உரும்பிராய் வடக்கு, காலஞ்சென்ற சோமசுந்தரம் பாலச்சந்திரன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்கள் விடயத்தில்
மரணமெய்தியவர்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு, சிவகுருநாதர்வீதி, 39ம் இலக்கத்தில் வசிக்கும் சோமசுந்தரம் பாலச்சந்திரன் கைம்பெண் வள்ளிப்பிள்ளை
மனுதார்.

மரணச்சொத்து
நியாயதிக்கம் இல. 4026

எதிர்

உரும்பிராய், உரும்பிராய் வடக்கு[பைங்கரன்] கனகசபை சோமசுந்தரம் கைம்பெண் இலட்சுமிப் பிள்ளை
எதிர்வாதி

மேலே இலக்கம்கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனமிலலா மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதறகாக தொடுக்கப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க, பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இதில் அக்கறையுடையவர் எவரேனும் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் தேதியன்று காலை 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி குறித்த பின்னுறுதிக் கட்டளை முற்றாக்கப்படுவதற்கு எதிராக காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகின்றனர்-

1987ம் ஆண்டு சித்திரை மாதம்16ந் தேதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்
[சி-0083]

## முதலாண்டு நினைவஞ்சலி

**கந்தையா முருகேசு**

அன்னை மடியில்:
22-09-1917
இறைவனடியில்:
10-08-1986
திதி: 30-07-1987

உருண்டதையாஓராண்டு
உன் நினைவலையோ ஓயவில்லை
இறை சேர்ந்த உன் ஆத்மா
பரம் பொருளுள் சங்கமித்தும்
நின் இனிய பணியதனை
எம் பாசசிறையினின்றும்
இவ்வூழி முடிவினிலும்
மீட்டிடவோ இயலாதய்யா.

உனது பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

அன்னை பவனம்,
கீரிமலை. சி-0096

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## உற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ் வண்ணை - கன்னாதிட்டி அருள்மிகுகாளியம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம்நாளைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஜூலை 7. 8 9. 10ம் திகதிகளில் சப்பரத் திருவிழா, தேர்க்திருவிழா, பூங்காவனம் ஆகியன இடம் பெறுகிறது.

## அலங்கார திருவிழா

யாழ்ப்பாணம், வியா

கோப்பாய் பலாலி கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8ம் திகதி சனியன்று காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## கோட்டையிலிருந்து துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், வியா

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தங்கராசா காந்தி என்ற 19 வயது இளைஞரே நேற்று முன்தினம் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடற்றொழில் செய்பவரென்றும், தொழிலுக்காக கரையூருக்கு வானில்சென்ற சமயமே பாங்சால் வீதியில் கோட்டை இராணுவத்தினரால் சுடப்பட்டார் எனவும் அறியப்படுகிறது. (கு)

## சுண்டிக்குழி ச. ச. நி புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

சுண்டிக்குழி சனசமூக நிலையத்தின் 20-வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில், கழக மண்டபத்தில் திரு. கே. செல்லத்துரை தலைமை நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்

தலைவர் கே. செல்லத்துரை. (ஆசிரியர்), செயலாளர்:ஜே சகாநாயகம், பொருளாளர்: செல்வன் செல்வீன். உப தலைவர்: எஸ். அருளையா, உப செயலாளர்: யேசுதாசன், உப பொருளாளர்: றெனிக்கன்.

நிர்வாக உறுப்பினர்களாக பிலிப் சவுந்தரநாயகம், பற்ரிக் சேவியர், ரி ஜே. தயாளன். நடராஜா, குலேந்திரன், எஸ் தாக்கி செல்லத்துரை, கிப்பொலிற் செல்வரட்டினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் (வி)

## ஓய்வு பெற்றார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் கடந்த 27 ஆண்டுகளாக கடமை புரிந்த திரு. சின்னப்பு துரைசாமி ஓய்வு பெற்றுள்ளார்.

நூலகத்தின் மேற்பார்வையாளராக 1980ம் ஆண்டில் சேவையை ஆரம்பித்து பின் நூலக உதவியாளராகப்பதவி உயர்வுபெற்ற திரு. துரைசாமி நூலகத்தின் உடனுதவும் பகுதிப் பொறுப்பாளராகவும் நல்லூர் நூலகக்கிளை, குருநகர் நூலகக்கிளைகளின் பொறுப்பாளராகவும் சேவையாற்றினார்.

அரியாலையைச்சேர்ந்த இவர் யாழ். ஸ்ரான்லி கல்லூரியின் பழையமாணவருமாவார்.

# 190 ஆபிரிக்க தேசியவீரர்கள் அங்கோலாவில் படுகொலை!

## தென் ஆபிரிக்க படைகள் அட்டகாசம்

லண்டன், ஜூலை 29

அங்கோலாவின் தென்பகுதியில் தென்னுபிரிக்கா படைகள் 190 ஆபிரிக்க தேசிய புரட்சிப்படை வீரர்களேயும் அங்கோலா இராணுவ வீரர்களேயும் படுகொலைசெய்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நமீபிய புரட்சி இயக்கமான 'சுலெப்போ' வீரர்களும் அங்கோலா இராணுவ வீரர்களும் தென்னுபிரிக்க ஆயுதப்படையினர்மீது மறைந்திருந்து தாக்கியதை அடுத்தே தென்னுபிரிக்கப் படையினர் தேடுதல் நடவடிக்கையின் போது 190 தேசிய புரட்சிப் படை வீரர்களேக்கொலேசெய்தனர்.

தென்னுபிரிக்க படையினர் கடந்த சில வருடங்களில் நடத்திய பெரும் தாக்குதல் நடவடிக்கை இது என்று கூறப்படுகிறது.

அங்கோலாவுக்குள் ஊடுருவல் நடத்திய பின்னரே தென்னுபிரிக்கபடைகள்இந்தப் படுகொலேகளேச் செய்துள்ளதாக அங்கோலா இராணுவம் தெரிவித்துள்ளது.

## ராஜீவ்—கூட்டணித் தலேவர்கள் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 29

இலங்கை இனப்பிரச்னே தொடர்பான இலங்கை - இந்திய ஒப்பந்தம் குறித்து தமிழர் விடுதலேக் கூட்டணிக் குழுவினர் நேற்றிரவு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை தனியாகச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

தமிழர் விடுதலேக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலேமையிலான இக்குழுவில் தலேவர் திரு. எம். சிவசிதம்பரம், துணேத்தலேவர் திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.




நன்றி-- ''இதயம் பேசுகிறது''

## முன்னேற்றம் அடைந்தபின் எவரும் பின்வாங்கக்கூடாது

### அமெரிக்கா கூறுகிறது

வாஷிங்டன். ஜூலை 29

இலங்கை இனப்பிரச்னேக்குச் சமாதானதீர்வு காணும் முயற்சியில் உற்சாகமளிக்கக் கூடிய முன்னேற்றம் அடைந்தபின்னர் அதிலிருந்து எவரும் பின்வாங்கக் கூடா

உலகச் செய்திகள்

தென அமெரிக்கா இப்பிரச்னேயுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் கேட்டுள்ளது.

இணக்கம் காண்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் உற்சாகமளிக்கக்கூடியதாயுள்ளதாகவும் இலங்கை - இந்திய தலேவர்களின் முயற்சியை இது பிரதிபலிப்பதாகவும் அமெரிக்க வெளிநாட்டுத் திணேக்கள பேச்சாளர் திரு. சாள்ஸ் ரெட்மான் வாஷிங்டனில் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அனேவரும் இதே வித முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டு இணக்கம் காணப்பட்டதும் அதனே செயற்படுத்தவேண்டுமென்றும் அமெரிக்கா வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

### யாழ். மந்திகை வைத்தியசாலேகளுக்கு

## இரு அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.போதனு வைத்தியசாலேக்கும், மந்திகை ஆதார வைத்தியசாலேக்கும் இரு அம்புலன்ஸ் வண்டிகள் நேற்று கொழும்பிலிருந்துவந்து சேர்ந்துள்ளன

கொழும்பு போதனுவைத்தியசாலேயிலிருந்து யாழ் வைத்தியசாலேக்கு அனுப்பப்பட்டுள்ள இவ்வன்புலன்ஸ் வண்டி 46000 கிலோமீற்றர் தூரத்தை ஓடிமுடித்திருப்பதாக அதன் மைலோமீற்றரிலிருந்துஅறியக் கூடியதாகவுள்ளது.

யாழ் போதனு வைத்தியசாலேக்கென 8 மாதங்கட்கு முன் வரவளேக்கப்பட்ட இவ் வண்டி இது வரைகாலமும் கொழும்பு போதனுவைத்தியசாலேயில் சேவையிலீடுபடுத்தப்பட்டதாக அறியப்படுகிறது. (கு)

## இந்திய டாக்டர்கள் வேலேநிறுத்தத்தை கைவிட்டனர்

புதுடில்லி, ஜூலை 29

கடந்த ஒன்பது நாட்களாக வேலேநிறுத்தம் செய்து வந்த இந்திய டாக்டர்கள் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவின் தலேயீட்டை அடுத்து கடந்தநள்ளிரவு பிரதமர் திரு. ராஜீவ்காந்தியைச் சந்தித்து தமது முடிவைத் தெரிவித்தபின் வேலேநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

## பலகோடி சட்டவிரோத சொத்துக்கள்

புதுடில்லி, ஜூலை 29

இந்திய புலனுய்வுத்துறை பொலிசார் நேற்று நாடுமுழுவதும் திடீர் சோதனே நடத்தி பலகோடி ரூபாபெறுமதியான சட்டவிரோத சொத்துக்களேக் கண்டுபிடித்துள்ளனர்.

வங்கி உயர் அதிகாரிகள், பொறியியலாளர்கள் உட்பட பலருக்குஎதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 67 இடங்களில் இத்திடீர் சோதனேகள் இடம்பெற்றன.

## சோவியத்தில் அத்துமீறி பிரவேசித்த மேற்குஜெர்மன் விமானிக்கு எதிராக நீதிமன்றவிசாரணே

மாஸ்கோ, ஜூலை 29

சோவியத்யூனியனுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்தமை சோவியத்யூனியனின் விமான போக்குவரத்து விதிகளே மீறியமை காடைத்தனம் புரிந்தமை, கடந்த மே மாதம் தனிவிமானம் ஒன்றில் சோவியத் யூனியனுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த மேற்கு ஜெர்மன் விமானிக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது இம்மாத இறுதிக்குள் இந்த விமானி சோவியத்தின் விசேட நீதிமன்றம் முன் நிறுத்தப்படுவார் என்றும் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு பத்து வருடம் வரை சிறைத்தண்டனே விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியனின் அதிநவீன பாதுகாப்புச் சாதனங்களேயும் மீறி 'கிரெம்ளின்' மைதானத்தில் விமானம் இறக்கப்பட்டதையடுத்து சோவியத் பாதுகாப்பு அமைச்சரும் விமானத் தளபதியும் பதவியிலிருந்து சோவியத் உயர் பீடத்தினுல் வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

## துணிவுக்கு பரிசு ரூ. 1 லட்சம்

புதுடில்லி. ஜூலை 29

பஞ்சாப்பில்உள்ள கிராமம் ஒன்றில் தீவிரவாதிகள் கும்பல் ஒன்றை எதிர்த்துதுணிவுடன் மோதி தீவிரவாதி ஒருவரைச் சுட்டுக்கொண்ற கிராமவாசிகளுக்கு பஞ்சாப் ஆளுநர் திரு. சித்தாத்சங்கர்ரே பாராட்டுத் தெரிவித்துள்ளார். ஒரு லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இந்தப்பணம் கிராமத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்.

### ஷெல் தாக்கி

## காயமடைந்த இளம்பெண் கணவன், பிள்ளேகளேத் தேடுகின்றுர்

(வவனியா நிருபர்)

வல்வெட்டித்துறையில்இடம்பெற்ற இராணுவநடவடிக்கையின்போது ஷெல் பட்டுகாயமடைந்து ஆபத்தான நிலேயில் கொழும்பிலும், அநுராதபுரத்திலும் சிகிச்சைபெற்று தற்போது வவனியா ஆஸ்பத்திரியில் சிசிச்சைபெற்றுவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வகுலாதேவி (30 வயது) தனது கணவனுக்கும், இரு பிள்ளேகளுக்கும் என்ன நடந்தகென தெரியவில்லே என தெரிவித்துள்ளார்.

இராணுவம் அறிவித்தபடி கோவிலுக்குள் தஞ்சமடைந்த போது இப்பெண் ஷெல்பட்டு காயமடைந்தநிலேயில் 6 மாதக் கைக்குழந்தயுடன் தற்போது வவனியாஅரசினர் ஆஸ்பத்திரியிலுள்ளர்.

வவனியாமாவட்ட சர்வோதய இயக்கம் இவரது நலனேக் கவனித்து வருகின்றது. இக் கைக்குழந்தைக்கு தேவையான பால்மா, உடுபுடவைகளேயும் சர்வோதய இயக்கம் வழங்கியதாக வவனியா மாவட்ட சர்வோதய இணேப்பாளர் செல்வராஜா தெரிவித்தார்.

## சிரிய "மிக்-21" விமானத்தை ஈராக் சுட்டு வீழ்த்தியது

பாக்தாத், ஜூலை 29

சிரியாவின் ''மிக்-21'' ரக விமானம் ஒன்றை ஈராக்சுட்டு வீழ்த்தியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் ஆகாய எல்லேக்குள் சிரியவிமானங்கள் பல தடவைகள்அத்துமீறிப பிரவேசித்துள்ளன. இம்முறையும் அத்துமீறிப் பிரவேசித்த போதே சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

உயிர்தப்பியுள்ள சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தின் விமானியைசிரியாவிடம் ஒப்படைக்க ஈராக் தயாராக உள்ளது. அத்தவேளேயில் விமான அத்துமீறலுக்கு சிரியா விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் ஈராக் தெரிவித்துள்ளது.

வளேகுடாப் போரில் சிரியா ஈரானுக்கு ஆதரவு அளித்ததை அடுத்து 1980ம் ஆண்டு அந்நாட்டுடனுன ராஜதந்திர உறவுகளே ஈராக் துண்டித்துக் கொண்டது

## சத்தியமூர்த்தி நூற்றுண்டு விழா

சென்னே, ஜூலை 29

இந்தியவிடுதலேப்போராட்ட வீரர் அமரர் சத்தியமூர்த்தியின் பிறந்தநாள் நூற்றுண்டு பூர்த்தி விழா அடுத்த மாதம் புதுக்கோட்டையில் கொண்டாடப்பட இருக்கின்றது.

இவ்விழாவில் இந்திய ஜனுதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கலந்துகொள்வார் என்று தமிழக செய்தி அறநிலேய அமைச்சர் திரு. வி. வி. சாமிநாதன் தெரிவித்தார்.

## லண்டன் பத்திரிகைகளின் முதல்பக்கசெய்தி

லண்டன், ஜூலை 29

இலங்கை இனப்பிரச்னே தொடர்பான ராஜீவ்-ஜே ஆர் உடன்படிக்கை, இதனே எதிர்த்து கொழும்பில் வெடித்த கலவரம், ஒப்பந்தம் தொடர்பான தமிழ் ஈழவிடுலேப் புலிகளின் நிலேப்பாடு ஆகிய விடயங்கள் இன்று லண்டன் பத்திரிகைகளில் முதல்பக்க முக்கியசெய்தியாக வெளிவந்தன.

''லண்டன் டைம்ஸ்'' உட்பட சிலபத்திரிகைகள் இன்று உடன்படிக்கைக்கு ஆதரவாக ஆசிரியத் தலேயங்கம் எழுதியிருந்தன.

## நாளே ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், வியா

உடுப்பிட்டி கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய ஓய்வூதியம் நாளே வெள்ளிக்கிழமை தொடக்கம் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனேயில் வழங்கப்படவுள்ளது

ஓய்வூதியப் பற்றுக்சீட்டுக்கள் தபால்மூலம் கிடைக்கப்பெருதவர்கள் உடுப்பிட்டி கிராமிய வங்கி முகாமையாளரிடம் அதனேப்பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

**மணிவாக்கு**

தோல்வி என்பது மீண்டும் புத்திசாலித்தனமாக ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பமாகும்.

— ஹென்றிபோர்ட்

# நமதுநோக்கு

## புரிந்து கொள்ளவேண்டும்

இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய பிரதம மந்திரிக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுவதற்கு எதிராக கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நடைபெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களும், வன்செயல்களும் ஆச்சரியத்துக்குரியனவன்று.

தமிழ் இனத்தவருக்கு ஒருதுளி நன்மைகூட சட்டரீதியாக வழங்கப்படுவதை விரும்பாத இயக்கங்கள் தென்னிலங்கையில் உண்டு. தமிழ்மொழி உபயோக சிறப்பேற்பாடுகள் சட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது அதற்கு மாருக போராட்டம் நடத்தி உயிர் கொடுக்கவும் கூட தயங்காத புத்தபிச்சுக்களும், அரசியல் வாதிகளும் இப்படியானஒரு சந்தர்ப்பத்தை விட்டுவைக்க மாட்டார்கள்.

தோட்டங்களில் தமிழ் தொழிலாளர்கள் குடியிருக்கும் ‘லயன்’ அறைகளை அவர்களுக்கு உரிமையாக்கிடவேண்டும் என தொழிலாளர் சங்கம்ஒன்று அண்மையில் ஒரு கோரிக்கை விடுத்தபொழுது அதனை முறியடிப்பதற்கென்றே ஒரு இயக்கம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள சிங்கள - ஆங்கில பத்திரிகைகளும அதற்கு மாருக பெருங்குரல் எழுப்பின, அதாவது தமிழ்மக்கள் சிங்களவர்களுக்குரிய உரிமைகள் எதிலும் பங்கு கேட்டுவிடக்கூடாதென்பதில் அவர்கள் மிகவும் கண்ணும் கருத்துமாகவிருக்கிருர்கள்.

அதுமட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு வாழ்க்கையே இனப்பிரச்னை தான். குறிப்பாக ஆட்சிபீடம் ஏறும் கட்சிகளுக்கு இனப்பிரச்னையை விட்டல் வேறு கைகொடுக்கும் பொருள் இல்லை. எனவே ஆட்சியிலுள்ள ஒருகட்சி தமிழருக்கென சிறு துரும்பைத்தானும் எடுத்துப்போடுமெனில் ஆட்சிக்குவர ஆவல்கொண்டுள்ள கட்சி அத்துரும்பை மலையாகப் பெரிதுபடுத்தி ஆரவாரம் செய்வது வழக்கமாகிவிட்டது. அந்த வகையில் இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் ஆதரவாளர்களும் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளார்கள்.

இப்படியான சிங்களமக்களின் கிளர்ச்சிக்கு அவர்களின் தலைவர்கள் அடிபணிந்து விடுவார்கள். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம்போன்றவைக்கு நேர்ந்த கதி மறந்திருக்காது.

அதேகதி ஜே ஆர். — ராஜீவ் ஒப்பந்தத்துக்கும் ஏற்படமாட்டாதா? அந்நிய நாடுஒன்றுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் ஒன்றினை அவ்வளவு எளிதாகக்கிழித்தெறிந்து விடமுடியும்என்று கூறமுடியாது இதற்கு காலம்தான் விடை கூறவேண்டும்.

இதேசமயம் இவ்வொப்பந்தம் குறித்து தமிழர் மத்தியில் செல்வாக்கும் பலமும்பெற்றுள்ள இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு திருப்தியேற்படவில்லை. இவ்வியக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரனும் குழுவினரும் புதுடில்லியில் தொடர்ந்து தங்கியிருக்கிருர்கள். திரு. ராஜீவ் காந்தி இந்தியா திரும்பியபின்பு மீண்டும் அவருடன் ஆலோசனை நடத்தவிருப்பதாகத்தகவல்கள் கூறுகின்றன.

ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டதாக நேற்று காலையில் இலங்கை இந்திய வானொலிகள் அறிவித்தபோதிலும் இங்கு பெரும் எடுப்பில் நடைபெற்றகடையடைப்பும் உண்ணாவிரதமும் கைவிடப்படவில்லை. புலிகள்இயக்கம் ஒப்பந்தத்தை ஏற்றிருக்குமானல் இவைகளுக்கு அவசியமில்லாமல் போயிருக்கும். அதேசமயம் திரு. பிரபாகரனும் குழுவினரும் மீண்டும் இந்திய பிரதமருடன் பேச்சுநடத்தவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது.

இதேசமயம் “ஈரோஸ்” இயக்கமும் ஒப்பந்தத்தினை நிராகரித்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

போராளிகள்ஆயுதங்களை கீழேபோடுவதும், இப்பிரதேசத்தில் இலங்கை இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதும் பற்றிய விடயமே இவர்களின் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்தஐந்தாண்டுகளுக்கு மேலாக தமிழ்ப்பகுதிகளில் இந்த இராணுவத்தினர் நடத்தியுள்ள அட்டூழியங்களை தமிழ்மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். அதே இராணுவம் போராளிகள் ஆயுதங்களைக் கீழேபோட்ட பின்னரும் இங்கே அதேவிதமாகத் தங்கியிருப்பதாயின் நிலைமை எப்படியிருக்கும்?

இதில் திரு. பிரபாகரனும் சகாக்களும் மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டினை இந்தியத்தலைவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

# ராஜீவுடனான பேச்சு திருப்திகரமாக இருந்தது

## புதுடில்லியில் பிரபா அறிக்கை





புதுடில்லி, ஜூலை 29

‘இலங்கை இனப்பிரச்னை தொடர்பான இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு அமையப் போராளிகள் தமது ஆயுதங்களைக் கையளிக்கும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதுகாப்பு நெருக்கடி குறித்த எமது அச்சத்தை இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி புரிந்துகொண்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளிக்கும் மனதாபிமானமுறையில் ஆதரவு தெரிவித்தார்’

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் புதுடில்லியில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சமரச உடன்பாடு, அதன் விளைவுகள் மற்றும் விடயங்கள் குறித்து தாம் தெரிவித்த கருத்துக்களை திரு. ராஜீவ் காந்தி மிகுந்த அக்கறையுடன் செவிமடுத்து தமிழர்களின் உணர்வுகளுக்கு முழு பரிவு காட்டினுரென்றும் திரு. பிரபாகரன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு ராஜீவுடனான பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்தது என்றும் திரு. பிரபாகரனின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொழும்பிலிருந்து புதுடில்லி திரும்பியபின் மீண்டும் அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் திரு பிரபாகரன் தெரிவித்தாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

# கட்டுநாயக்காவில் ஜெனி; காலிமுகத் திடலில் ஜனதிபதி வரவேற்பு

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இலங்கை வந்த இந்தியப்பிரதர் திரு ராஜீவ் காந்தியை கட்டுநாயக்கா விமான நிலயத்தில் நிதி அமைச்சர் திரு. ஜெனி டிமெல் வரவேற்ருர்.

கட்டுநாயக்கா விமான நிலயத்திலிருந்து விஷேட ஹெலிகொப்டர் மூலம் ராஜீவ் தம்பதிகள் கொழுப்பு காலிமுகத்திடலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

காலிமுகத்திடலில் பிரதமர் தம்பதிகளை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பாரியாரும் வரவேற்று மோட்டார் பவனியாக ஜனதிபதி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

ஜனதிபதி மாளிகையின் முன் இடம் பெற்ற வைபவத்தில் ஜனதிபதி இந்தியப் பிரமருக்கு பிரதம நீதியரசரும் சபாநாயகரும், மற்றும் அமைச்சர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

திரு ராஜீவுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

### 10 ஹெலிகாப்டர்கள் பாதுகாப்பு

முதலில் கட்டுநாக்கா விமான நிலயத்திலிருந்து ராஜீவ் தம்பதிகளை அழைத்து வந்த ஹெலிகொப்டருக்கு 10 இராணுவஹெலிகாப்டர்கள் பாதுகாப்பு அளித்தன.

விமான நிலையத்தில் இந்திய தூதரக அதிகாரிகளும் ராஜீவை வரவேற்க வந்தனர்.

ஜனதிபதி மாளிகைக்கு முன் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது பொலிஸாரும் ஆயுதப்படையினரும் மற்றும் சில அழைப்பாளர்களுமே சமுகமளித்திருந்தனர்.

ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்ததால் வீதிகளில் மக்கள் நடமாட்டமே இருக்கவில்லை.

### ஆர்வம் வேண்டும்

கூட்டுறவின் அமைப்பை நாம் பார்த்தால், சங்கங்கள் நட்டத்தில் ஓடினலும், அரசின் முயற்சி என்பதால் அதன் கௌரவத்தைப் பேண அவை அந்த நிலையில் தொடர்கின்றன. அரச தலையீட்டை அப்புறப்படுத்தி, கல்வியில் எம் மக்கள் காட்டும் அக்கறைபோல் சிறு தொழில் விருத்தியிலும் அதுபோன்ற ஆர்வம் காட்டவேண்டும்.

— கே. சி. தங்கராசா

# கொழும்பு புறப்படுமுன் ராஜீவ்-- பிரபாவின் அறிக்கை சாதகமாக இருக்கிறது

[புதுடில்லி]

“தமிழ்ஈழவிடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தம்முடன் கடந்த நள்ளிரவு நடத்திய பேச்சுவார்த்தையின் பின் வெளியிட்ட அறிக்கை சமாதான உடன்பாட்டுக்கு சாதகமாக இருக்கிறது.”

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி புதுடில்லியில் தெரிவித்தார்.

கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் திரு. காந்தி விமான நிலயத்தில் நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக பி. பி. ஸி. வானொலி அறிவித்தது.

நேற்று செவ்வாய்க்கிழமை சமரசத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் தலைவர், யாழ்ப்பாணத்திலிருந்து தம்மை அழைத்துவந்ததுபோல் மீண்டும் அங்கேயே கொண்டுபோய் விடுமாறு இந்திய அதிகாரிகளிடம் கேட்டபோதிலும் இப்போது திரு. ராஜீவ் இலங்கையிலிருந்து திரும்பும்வரை புதுடில்லியில் தங்கியிருந்து மீண்டும் அவருடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கமாற்றம் என புதுடில்லியில் பி.பி ஸி நிருபர் தெரிவிக்கிருர்.

# எல்லார்க்கும் இனியவர்

அமரர் கே. சி. தங்கராசா அவர்கள் ஒருஅரசியல் வாதியாக இயங்காதபோதிலும் தமிழ்ச் சமுதாயத்தின் பல துறைகளில்அவர்செய்த சேவைகள் அளப்பரியன அவரின் சேவைகளை தமிழ் மக்கள் பாராட்டுகின்றன. அவர் மறைந்தாலும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ‘ஈழநாடு’ தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு நண்பனுகத் திகழ்கிறது.

அவர் அரச சேவையில் இருக்கும்பொழுது நான் முதன்முதல் அவரைச் சந்தித்தேன். அன்று தொடக்கம் அவருடன் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் கிடைத்தது. அவரைச் சந்திப்பவர்களுடைய கருத்துக்களை அது எந்தத் துறையாக இருந்தாலும்சரி அவற்றிற்கு மதிப்புக்கொடுத்து மிகவும் அன்புடன் வரவேற்பார். மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுத்து காரியங்களைச் செய்வதன்மூலம் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் நண்பனுகவும் இருந்தார் என்பதை அரசசேவையிலும், கடதாசிக் கூட்டுத்தாபனத்திலும், ‘ஈழநாடு’விலும் காணக் கூடியதாக இருக்கிறது.

அவரது இழப்பு தமிழ்மக்களுக்கு மாத்திரமன்றி இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் பெரும் இழப்பாகும்.

— அ. வைத்திலிங்கம்.

# கலவரம் வெடித்த போதிலும் ஒப்பந்தம் அவசியமென்பதால் கொழும்பு செல்கிறேன்

[புதுடில்லி]

‘இலங்கையில் கலவரங்கள் மூண்டபோதிலும் இனப்பிரச்னைக்கான சமாதான ஒப்பந்தம் மிக மிக அவசியம் என்பதாலேயே இந்தக்கட்டத்திலும் நான் இலங்கை செல்கிறேன்.

‘இந்த சமாதானத்திட்டம்

(7ம் பக்கம் பார்க்க)

## நன்றியுடன்

# ஒத்துழைப்பு கிட்டும் என்று பிரதமர் ராஜீவ் நம்பிக்கை

(புதுடில்லி)

சமாதான ஒப்பந்தத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் மற்றும் தமிழ்க் குழுக்களுக்கும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நன்றி

[5ம் பக்கம் பார்க்க]

புதிய யோசனை:

# தமிழ்பேசும் மக்களை நிரந்தர அடிமைகளாக்கிவிடும்''

யாழ்ப்பாணம், வியாழன் "தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் உணர்வலைகளையும் குழிதோண்டிப் புதைக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தந்திரம் மிக்க கபடநாடகத்தில் பிரதான பாத்திரமேற்று கைச்சாத்திட வந்திருக்கும் இந்திய அரசின் இந்தமுடிவை பிற்போக்குத் தனமான நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம் இப்புதிய யோசனையானது எமது புனிதபோராட்டத்தை நசுக்குதுடன் தமிழ் பேசும் மக்களை நிரந்தர அடிமைகளாக்கியுள்ளது.''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சார்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசு என்றும் சர்வதேச ரீதியில் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றும் கருதப்படும் இந்தியா தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் இடையே மேற்கொள்வதற்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தமை தமிழ் பேசும் மக்களினாலும் போராளிகளினாலும் வரவேற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"இந்தநிலையில் தமிழ்பேசும் மக்களாகிய நாம் இந்திய அரசிடம் எதிர்பார்ப்பதெல்லாம் எமது நிரந்தர விடிவிற்கான பாதையைச் செப்பனிடும் வேலைக்கான அடிப்படை அம்சங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆதரவும் பங்களிப்புமாகும்.

"இது இவ்வாறிருக்க இலங்கை அரசின் அரசியல் வலையில் இந்திய அரசு ஏற்கனவே அகப்பட்டு ஏமாற்றம் அடைந்தது. இதனை அண்மையில் பிரதமர் ராஜீவ்காந்தியே குறிப்பிட்டமை இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது இது இவ்வாறிருக்க மற்றொரு புதிய வலையில் சிக்குவதற்கான இப்புதிய உடன்பாடானது ஜே.ஆர் அரசுக்குக் கிடைத்த அடுத்த பெரும் வெற்றியாகக இருக்கமுடியும் என்பதையே இங்கு வலியுறுத்திக் கூறுகிறோம். எனவே நாம் மீண்டும் இந்திய அரசை வலியுறுத்திக் கேட்பது என்னவெனில் தங்களது சமரசப் பேச்சு வார்த்தைகளுக்கான வழிமுறைகள் எப்பொழுதும் தமிழ் பேசும் மக்களின் இலட்சியத்தை நிறைவேற்றக்கூடிய ஒரு நிரந்தர தீர்வை நோக்கிச் செல்வதற்கான முயற்சியாக இருக்க வேண்டும் என்பதே.''

## நன்றியுடன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துக்கொண்டார்.

உடன்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்ததுடன் உடன்பாட்டை உடன் அமுல்செய்வதற்கும் மேற்படி குழுக்களும் கூட்டணியும் ஒத்துழைப்பு வழங்கும் எனத் தாம் நம்புவதாகவும் திரு காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் கொட்டடி

**அமரர் சீனிவாசகம் தியாகராஜா**

மலர்வு: 28-04-1923

நிறைவு: 01-07-1987

உங்கள் அன்பில் திளைத்து இன்று பிரிவால் தனித்து வாடுகிறோம் ஐயா! நீங்காத நினைவுகள் எம் நெஞ்சங்களில் நிலைபெறுகுது- உங்கள் தூய ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கிறோம். முக்கிய குறிப்பு: இன்று (30-10-1987) வியாழன் சுதுமலையில் எமது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் அந்தியேஷ்டி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் பங்கு கொண்டு எங்கள் தலைவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்க வருமாறு கேட்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
'பசுபாதபதி',
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(சி 0097)

## போர்பயிற்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளுக்குப் பயிற்சியளிப்பது, இலங்கைக்கெதிரான பரசாரங்களை மேற்கொள்வது என்பனவும் நிறுத்தப்படும் என்று தெரியவருகின்றது

மேலும் இருநாட்டு கடல் எல்லைகளில் இந்திய- இலங்கை கடற்படையினரும்பாதுபாப்பு சேவையில் ஈடுபடுவார்களாம்.

## ஒப்பந்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

லடியிலிருந்தும், கோப்பாயிலிருந்தும் காலை 10மணிக்கு ஆரம்பமாகி பிரதான வீதிகளூடாக யாழ். பல்கலைக்கழகத்தை வந்தடையும்.

இவ்விரு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் யாழ். குடாநாட்டிலுள்ள பல்வேறுபொதுஸ்தாபனங்களையும் கலந்து கொள்ளுமாறு பொதுஸ்தாபனங்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. [வா]

## தென்னிலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் இடம் பெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்கள் கட்டிடங்கள் ஆகியவற்றை தீமூட்டி எரித்தனர்

இவர்களை அடக்க பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதுடன் ஹெலிகொப்டர்களிலிருந்தும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களில் குறைந்தது 10 பேர் பலியாகியிருக்கலாமென செய்தி நிலைய அறிக்கைகள் தெரிவிககின்றன.

இதேவேளை பல தென்னிலங்கை மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றதாகவும், பொலிஸார் இவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது. (ஊ)

## இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படின் இந்திய இராணுவ உதவியும் அளிக்கப்படும்.

இந்தியாவுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாக திருமலை துறைமுகத்தையோ அல்லது வேறு எந்த துறைமுகத்தையோ பிறநாடுகள் பயன்படுத்த இலங்கை அனுமதிக்கக்கூடாது.

மேற்படி சரித்திரபிரசித்திபெற்ற ஒப்பந்தம் நேற்று மாலை 3-37 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் விருந்தினர் அறையில் கைச்சாத்திடப்பட்டபோது இந்திய குழுவினரும் இலங்கை அமைச்சர்களும் குழுமியிருந்தனர் அமைச்சர்கள் ரொனிடிமெல் காமினி. ஹமீட், ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ், ஹாருன்ளே, தேவநாயகம நிஸங்க விஜயரத்தின ஆகியோர் சமுகமளித்திருந்தனர் இவர்களுடன் இந்திய இலங்கை தூதுவர்களு சமுகமளித்திருந்தனர்

## புதிய யோசனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமைக்கு வந்தவர்களும் தமது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

யாழ். போதனா வைத்தியசாலை உட்பட குடாநாடுமுழுவதுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நோயாளரின் வரவு நேற்று மிகக்குறைவாக காணப்பட்டது.

நேற்றைய ஹர்த்தாலினால் அரச, தனியார் நிறுவனங்கள் யாவும் இயங்காமலிருந்தன

யாழ் நகரிலுள்ள சில பிரதான வீதிகள் உட்பட குடாநாட்டிலுள்ள பல வீதிகளில் நேற்று மறியல் போராட்டமும் நடத்தப்பட்டது.

## உண்ணாவிரதம்

சாவகச்சேரி பொதுச்சந்தை கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், கோப்பாய் கந்தசுவாமி கோயில், நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில், கல்வியங்காடு இலங்கைநாயகி ஆலய முன்றல், அரியாலை சன சமூக நிலையம், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில், திருநெல்வேலி, கொழும்புத்துறை, ஐயனார் கோயிலடி சன சமூக நிலையம், சித்தன்கேணி பிள்ளையார் கோயில், சங்கானை அரசடி வைரவர் கோயில், கச்சேரி பழைய பூங்கா வீதி, மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில், சுன்னாகம் ஆகிய இடங்கள் உட்பட குடாநாடு முழுவதுமுள்ள சன சமூக நிலையங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் என்பவற்றில் நேற்றுக்காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஐந்து மணிவரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

'இந்தியஅரசே தமிழீழத்தை அங்கீகரி', 'இடைக்காலத்தில் எம்மை இடு காட்டிற்கு அழைத்துச்செல்லவேண்டாம்' 'நமது தலைவன் பிரபாகரனே' போன்ற பல சுலோக அட்டைகளை தாங்கியவாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

## கொடும்பாவிகள் எரிப்பு

சில இடங்களில் உண்ணாவிரத முடிவில் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க "இலங்கை இந்திய அரசின் துரோகத்தனத்தை அனுமதிக்க முடியாது'' என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் நேற்று யாழ். நகர் பூராவும் ஒட்டப்பட்டிருந்தன. [எ]

இராணுவ நடவடிக்கையால்

# உளரீதியாகப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவுச்சிகிச்சை

மாவிட்டபுரம், நிருபர் "வலி- வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உளரீதியான பாதிப்புக்களை ஆராய்ந்து அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுப்பதென வலி- வடக்கு பிரஜைகள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டமொன்று ஒன்றிய அலுவலகத்தில் சட்டத்தரணி வி. எஸ் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றசமயம் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இராணுவ நடவடிக்கையால் மக்களுக்கு உளரீதியாக பெரும் பாதிப்பு ஏற்பட்டு எதிர்காலம் குறித்து அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்நிலையில் இப்பாதிப்பு குறித்து உளவியல் நிபுணர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி மக்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசாவின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# "பாரதியின் கனவு இன்று நனவானது"

(சென்னை)

"சிங்களத் தீவுக்கொரு பாலமமைப்போம் என்று தேசிய கவி பாரதி கண்டகனவு இன்று நனவாகிவிட்டது சொல்லொண்ணாத் துயரமும் உயிர்த்தியாகமும் புரிந்து வந்த தமிழர்களின் வீரப் போராட்டம் பெரும் பயனளித்துள்ளது ''

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் ஐ கட்சித் தலைவர் திரு. மு பழனிபாண்டி நேற்று இந்திய தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் அரசியல் தீர்வொன்றே வழி என்று அன்று அன்னை இந்திரா காந்தி எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து தமிழக முதல்வர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் ஆற்றிய முழுமையான ஒத்துழைப்பும் இந்தியப் பிரதமரின் விவேகமான நடவடிக்கையும் இராஜிய தந்திரமும் இன்று பலனளித்துள்ளது.

'இந்த ஒப்பந்தம் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ஜெயவர்த்தன வழி செய்வார் என்று நம்புவதுடன் தமிழக மக்கள் சார்பில் நன்றியை கூறுகிறேன் என்றார்.

வலி வடக்கில்—

# இந்திய நிவாரணம் 3ம் திகதி முதல் ஆரம்பம்

[மாவிட்டபுரம் நிருபர்]

வலி வடக்கில் இந்திய நிவாரண உதவிப்பொருட்களின் விநியோகம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளை நிலையங்கள் மூலம் ஆகஸ்ட் 3ம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே அகதி முகாம்களில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக இந்திய உணவு விநியோகம் இடம்பெற்றது.

ஆனால் தற்போது இடம் பெயர்ந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உணவுவிநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிவடக்கில் இந்த உணவு விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளைகளின் கையளித்து இந்திய நிவாரணத்தை பெறலாம்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுமக்களும் எந்தெந்த கிளை நிலையங்களில் இந்நிவாரணப் பொருள்களை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கீரிமலை கிராம சேவகர் பிரிவு மக்கள் 7ம் இலக்க கருகம்பானை கிளையிலும் 8ம் இலக்கம் இளவாலை கிளையிலும் பெறலாம்.

தெல்லிப்பழை தென்மேற்கு கிராமசேவகர் பிரிவு மக்கள் 7ம் இலக்க கருகம்பானை கிளையிலும், 5ம் இலக்க பன்னாலை கிளையிலும் 6ம் இலக்க விழிசிட்டி கிளையிலும், 14ம் இலக்க கொல்லங்கலட்டி கிளையிலும் பெறலாம்.

மாவிட்டபுரம் கிராமசேவகர் பிரிவு மக்கள் 9ம் இலக்க தெல்லிப்பழை சந்தி கிளையிலும், 4ம் இலக்க விராங்குடை கிளையிலும், 27ம் இலக்க அம்பனை கிளையிலும் 1ம், 2ம் இலக்க துர்க்கையம்மன் ஆலயத்திற்கருகிலுள்ள கிளைகளிலும், 3ம் இலக்க மாத்தனை கிளையிலும், 14ம் இலக்ககொல்லங்கலட்டி கிளையிலும் பெறலாம்

தெல்லிப்பழை-வீமன்காமம் கிராமசேவகர்பிரிவுமக்கள்27ம் இலக்க அம்பனை கிளையிலும், 9ம் இலக்க தெல்லிப்பழைசந்தி கிளையிலும், 1ம், 2ம் இலக்க துர்க்கையம்மன் கோவில் கிளைகளிலும் பெறலாம்.

மயிலிட்டி வடக்கு, மயிலிட்டிக்கரை கிராமசேவகர் பிரிவு மக்கள் 26ம் இலக்க தையிட்டி கிளையிலும் 24ம் இலக்க மயிலிட்டிக்கரை கிளையிலும் பெறலாம் இந்த கிராமசேவகர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய கிளையில் பொருள்களைப் பெறலாம்.

ஆகஸ்ட் 3ம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு இந்த நிவாரண பொருள் விநியோகம் இடம்பெறுமென தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கத் தலைவர் எஸ். சிவமகாராசா தெரிவித்தார்.

## பிந்திய

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகத்தினால் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டம் செய்த களனி பல்கலைக்கழக மாணவர் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலும் பலர் பலியாகினர்.

இதேவேளை மாத்தறையிலுள்ள இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கியின் கிளை அலுவலகமும் தீயிடப்பட்டுள்ளது. (ஊ)

## கைதான பதினொரு யாழ்ப்பாண
# பல்கலைக்கழக மாணவர்களில் 3 பேர் காலியில் விடுதலை

யாழ்ப்பாணம்,வியா வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 11 யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் மூன்றுபேர் காலி முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதப்பகுதியில் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற ஒப்பரேஷன் லிபரேஷனின்போது இந்தப் பதினொரு பல்கலைக்கழக மாணவர்களும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கப்பல் மூலம் காலிமுகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்கள் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித்அத்துலத்முதலி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரும், பல்கலைக்கழக செயலாளரும், பல்கலைக்கழக மானியக்குழுத் தலைவருமான கலாநிதி ஸ்ரான்லி கல்பகே ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவர்களை விடுவிக்குமாறு கேட்டிருந்தார்.

விடுதலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் விபரம் வருமாறு: மாணிக்கம் லோகசிங்கம், செல்லையா சுமந்திரன், கனகரத்தினம் நக்கீரன். (வா)

## போலி உத்தரவுப் பத்திரத்துடன்
# நிவாரணப் பொருள் பெற வந்தவர் முகாமையாளரிடம் சிக்கிக்கொண்டார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் ஒருவரின் கையொப்பத்துடன் போலி உத்தரவுப் பத்திரமொன்றுக்கு அரச நிவாரணப் பொருள்களைப் பெற வந்த ஒருவர் அப்பகுதி ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளரிடம் வகையாக சிக்கிக்கொண்டார்.

இந்தப் போலி உத்தரவுப் பத்திரத்துடன் நிவாரணப் பொருள்களைப்பெறவந்த இந்த நபர் தனது குட்டுவெளிப்பட்டதும், நிவாரணப் பொருள்களைப் பெறாமல் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டாராம்.

இந்த போலி உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாகத் தெரியவருவதாவது;

குறிப்பிட்ட ஒரு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இருந்து உரிய முத்திரையுடன் உ. அரசாங்க அதிபர் கையொப்பத்துடன் நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்காக பெறப்பட்ட உத்தரவுப் பத்திரத்துடன், ப. நோ. கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று அங்கு இடாப்பில்பதியப்பட்டபின் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையில் உள்ள கிளை விற்பனை நிலையமொன்றில் நிவாரணப் பொருள்களைப் பெற முயற்சிக்கையிலேயே கிளை முகாமையாளரினால் உதவி அரச அதிபர் கையொப்பம் போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இந்தக்கையெழுத்துமோசடி பற்றி சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## நகை கேட்ட படையினர் மீது
# பெண் பாய்ச்சல்

நெல்லியடி, புதன் அண்மையில் சிவில் உடையில் ஒரு வீட்டுக்குள் பிரவேசித்த சிலர், அவ்வீட்டுப் பெண்ணின் நகைகளைக் கேட்டபோது அவர் சீறிப்பாய்ந்து துணிகரமாக ஏசிய சம்பவம் ஒன்று நெல்லியடியில் நடைபெற்றது.

முதல்நாள் அந்த வீட்டில் வந்து தனது கணவனிடமிருந்த ரூபா300ஐ எடுத்துச்சென்ற அதே குழுவினர் அடுத்த நாள் அப்பெண்ணின் நகைகளை கேட்டபோது, அப்பெண், "நேற்றுத்தானே ரூபா 300/- கொண்டு சென்றீர்கள் இன்று இங்கு பணம் மரத்தில் காய்க்கிறது என்ற நினைப்போடு வந்தீர்களா? எதுவுமே தரமுடியாது' என்று சீறிப்பாய்ந்தாராம். இதையடுத்து வந்தவர்கள் பேசாமலே போய்விட்டார்களாம்.

நெல்லியடியில் இன்னொரு பெண் மாலை நேரம் குளித்துக் கொண்டிருந்தபோது வேறோர் குழுவினர் அவரது மோதிரத்தைத் தரும்படி வெருட்டினர்களாம். குளித்துக் கொண்டிருந்தவரை கிணற்றுக்குள் தள்ளிவிடுவதாகவும் பயமுறுத்தினர்களாம் ஆனல் அப்பெண் 'இது என் விவாகஞாபக மோதிரம். எக்காரணம் கொண்டும் தரமுடியாது' என்று கண்டிப்பாக கூறியதையடுத்து வந்தவர்கள் அதேவழியால் போய் விட்டார்களாம்.

## இன்று
(சுண்டுக்குளி)

கந்தரோடை அருளானந்த விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் எதிர்வரும் 7-ந் திகதி சப்பரமும், 8-ந் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

## மக்கள் தொண்டர்



வட்டூர் மண்ணில் அவதரித்த அ. க குமாசாமி மறைந்து எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. வைத்தியகலாநிதி அ. க. யாழ்ப்பாணத்திலே மிகப்பழமை வாய்ந்த ஒரு வைத்திய குடும்பத்தினைச் சேர்ந்தவர் இவர் மருத்துவத்துறையில் மட்டுமல்லாமல் மக்கள் நலங்கருதும் பிறதுறைகளிலும் ஆர்வம் காட்டிய சீரிய பண்பாளர்.

தானுண்டு, தன் குடும்பமுண்டு என்று இருக்கவில்லை. தனது வீட்டிலேபே மருத்துவமனை அமைத்து இலவசமாக இரவு, பகல் பாராது எந்த நேரத்திலும் சிகிச்சை அளித்து வந்தார்

இவர் அகில இலங்கைசித்த வைத்திய சங்கத்தில் 18 ஆண்டுகள் தலைவராக அரும்பணியாற்றினர்.

இவரது அளப்பெரும் சேவைகளை கண்ட இலங்கை அரசு 1986ல் உறுதிமொழி ஆணையாளர் வரிசையை நல்கி கௌரவித்தது. அதையடுத்து அவரை சமாதான நீதவானுக நியமித்தது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தால் போல சித்தவைத்தியர்களுள் தனிப்பெருந் தலைவராகக் கொண்டு இவருக்கு "இராஜ வைத்தியர்'' என்ற பட்டத்தையும்தவழங்கிக்கௌரவித்தது. - மயில்வாகனம் ரவி

## "வடபகுதி மக்களின் துன்பங்களை
# சிங்களவர்கள் அறிவதற்கு
## லயன்ஸ் கழகம் உதவ வேண்டும்"

[பண்டத்தரிப்பு நிருபர்]

"வடபகுதியில் எமது தமிழ் பொது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கஷ்டங்கள்பற்றிய உண்மையான நிலையை தென் பகுதியிலுள்ள சிங்கள பொது மக்கள் நன்கு அறியாதவர்களாக இருக்கின்றார்கள் அப்பகுதியிலுள்ள லயன்ஸ் கழகங்களுக்கு இங்குள்ள உண்மை நிலையை மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை தெரிவிகக வேண்டும்.''

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 1987/88ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை பதவி ஏற்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் லயன்ஸ் 306 பீ பிரதிமாவட்ட ஆளுநர் திரு. எம். இராசேந்திரா குறிப்பிட்டார்

வடலியடைபிலுள்ள கழகப் பொருளார் திரு தம்பு தேவராசாவின் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இவ்வைபவத்தில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் தலைமையிலானபுதிய நிர்வாகசபையினருக்கு பதவி பிரமாணத்தைதிரு. இராசேந்திரா நடாத்திவைத்தார். முன்னுள் கழகத்தலைவர் டாக்டர் எமில் அத்தனுசியார் தலைமையில் ஆரம்பமான இவ்வைபவத்தில் திரு இராசேந்திரா தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

கடந்த பல வருடகாலமாக வடபகுதியில் சிறந்த பலசமூக சேவைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அதற்கான பிரசுரங்களையும், சான்றிதழ்களையும் அகில இலங்கை ரீதியில் பெற்று முன்னணியில் திகழும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் சேவைகளை புதிய நிர்வாகசபை மேலும் தொடர்ந்து மேற்கொண்டுவரும் என்பது எமது நம்பிக்கையாகும் என்றார்.

புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது : எமது கழகம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கென நிறுவியிருக்கும் மாடிக்கட்டிடத்தை விரைவில்பூர்த்தி செய்வதற்குதுரித நடவடிக்கை மேற்கொள்வதுடன் தொழிற்பயிற்சி நெறிகளை விஸ்தரிக்கவும திட்டமிட்டுள்ளோம். அத்துடன் எமது பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு தேவையான உதவிகளைசெய்து கொடுப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். எமது செயல் திட்டங்களை நல்லமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு கழக உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும்அவசியம் என்றார்

வலயத் தலைவர் திரு இ விஜயரத்தினம் உரையாற்றுகையில் எமது வட்டு லயன்ஸ் கழகத்தின் புனித பணிகள் யாவும் சமுதாயத்தின் நலனை முன்னிட்டே மேற்கொள்ளப் பட்டுவருவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் எதிர்காலத்திலும் இக்கழகம் பல சாதனைகளை நிகழ்த்தி மக்களுக்கு பொது சேவையாற்றி வரும் என்று கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு எஸ். பத்மநாதன். கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர். திரு. த செல்வராசா மற்றும் யாழ்ப்பாணம் சாவகச்சேரி லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்கள். கழகத்தில் சிறந்த சேவையாற்றிய உறுப்பினர்களுக்கான பதக்கங்களும் வழங்கப்பட்டன. இறுதியில் சட்டத்தரணி லயன் கே. குணரத்தினம் நன்றிகூறினர்.

## பெற்றேல், டீசல் போட்டி வியாபாரம்:
# முகவர் நிலையங்களில் ரூ.17
## ப. நோ. கூ. ச. ஆங்காடியில் ரூ. 16

யாழ்ப்பாணம்,வியா யாழ்ப்பாணத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் முகவர் விற்பனை நிலையங்களிலும் பார்க்க தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் அங்காடி வியாபாரிகளிடமும் தற்போது எரிபொருள் மலிவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இதனால் எரிபொருள் விற்பனையில் தனியாருக்கும் எரிபொருள் முகவர் விற்பனையாளர்களுக்குமிடையே பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது.

பெற்றேல்,டீசல்விற்பனையில் மட்டுமே இப்போட்டி நிலவுகிறது

எரிபொருள் விற்பனைநிலையங்களில் ஒரு லீற்றர் பெற்றோல் 17 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டுவரும் வேளையில் தனியாரிடமும், அங்காடிவியாபாரிகளிடமும் ஒரு லீற்றர் பெற்றோல் 16 ரூபாவிலிருந்து 16.50 சதம் வரைக்கும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் முகவர்களில் ஒன்றாகச் செயற்பட்டுவரும் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கமும் ஒரு லீற்றர் பெற்றோலை 16 ரூபாவாக விற்பனை செய்து வருகிறது.

வவுனியாவில் ஒரு லீற்றர் பெற்றோல் 13-50 சதத்துக்கு கொள்வனவு செய்யப்பட்டே இங்கு கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (வா)

## "சுகாதாரத்தைப் பேண
# இளைஞர் பணி அவசியம்"

யாழ்ப்பாணம், வியா "சுத்தம் சுகம் தரும்'' என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கொப்ப எம்மை நாம் சுத்தமாக பேணிக்கொள்ளும் அதே வேளையில் எமது கிராமத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் இந்தப் பணியில் ஈடுபட எமது கிராமத்து இளைஞர்களும், யுவதிகளும் முன்வர வேண்டும்''.

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்ற சங்கத்தினரால் அண்மையில் சுகாதார வாரம் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி அங்கு இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றுக்கு தலைமை வகித்துப் பேசிய றேட்டறி கிராமக் குழுத்தலைவர் திரு. மா. உதயகுமார் மேற்கண்டவாறு கூறினர்.

அங்கு இடம்பெற்ற கருத்தரங்கில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி திரு: வைத்தீஸ்வரன், சுகாதார பரிசோதகர் திரு. சு. தங்கத்துரை ஆகியோரும்உரையாற்றினர். திரு எஸ் ஆனந்தராசஜா நன்றி தெரிவித்தார்.

# இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—14[1987-07-30]
கிழமை—வியாழன்
திதி—சதுர்த்தி காலை 8-46ன் மேல் பஞ்சமி.
நக்ஷத்திரம்—உத்தரம்

மேடம்: எதிர்பாராத ஆபத்துக்களில் மாட்டிக்கொளள நேரிடும், உளவீட்டிலேயே பூசல்கள் தோன்றும், தெய்வ வழிபாடு நன்று.

இடபம்;- பொதுப்பணிகளில் ஈடுபடுவோர் பொதுமக்களின் ஆதரவைப்பெறுவர், முயற்சியிலும் முன்னேற்றம், பரம் பொருளின் அருளும் உண்டு.

மிதுனம்:- தொழில் துறையில் சிறப்புண்டு, புதிய கண்டுப்பிடிப்புக்களும்இடம்பெறும் பொறியியலாளர்களுக்குச் சிறப்பானதினம்.

கடகம்:- பெரியோர் ஆதரவும், செய் தொழில் சிறப்பும் உண்டு, மேலிடத்து உதவியும் உண்டு, குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

சிங்கம்:- துன்பத்தின்ரேகை படரும், தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிப்பர்.

கன்னி:- மனப்போராட்ட அதிகரிக்கும், உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம், உடல் நலமும் குன்றும்.

துலாம்:- இதமான வாழ்வு, இன்சொல் இவற்றுடன் தொழிலாலும் சிறப்புமுண்டு, சில நன்மையான பயணங்களும் ஏற்படலாம்.

விருச்சிகம்:- குடும்பத்திலும் சிறு பூஷல்களுக்குமிடமுண்டு, வீணான சிந்தனையால் சோர்வடைவீர், மனத்திடம் வேண்டும்.

தனுசு:- முயற்சியில் முன்னேற்றம் உண்டு, மாணவர்களுக்கு கல்வி சுகமுண்டு, பொருள் வரவுமுண்டு.

(7-ம் பக்கம் பார்க்க)

# "இந்திய நிவாரண உதவிகள் அகதிகளுக்கு போதுமானதாக இல்லை"

## – சௌத்திரி

(பண்டத்தரிப்பு நிருபர்)

"இங்குள்ள அகதிகளின் கஷ்டநிலைபற்றி நேரில் பார்வையிட்டபோது மிகவும்கவலையடைந்தேன். எமது நிவாரண உதவிகள் இவர்களின் கஷ்ட நிலைகளை பார்க்கும் போது போதுமானதாகஇல்லைஎன்றே கருதுகின்றேன். அகதிகளின் சகலசேவைகளையும்நிறைவேற்றிக்கொடுக்கவும், அவர்களின் கஷ்டங்களை போக்கவும் மேலும் உதவிகள் தேவைப்படுகின்றன. இந் நிலையில் வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகம் அகதிகள் வசதியாகதங்குவதற்கு இந்தமண்டபத்தைஅமைத்துக் கொடுக்க முன்வந்ததை பாராட்டாமல் இருக்கமுடியாது

இவ்வாறு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நிறுவிக்கொடுத்துள்ள வசிப்பிடமண்டபத்தைதிறந்து வைத்து உரையாற்றுகையில் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. சௌத்திரி குறிப்பிட்டார். சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் தலைவர் திரு. த. சீவரத்தினம் தலைமையில் கடந்தசனியன்று நடைபெற்ற இவ்வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஒருவரும், தமிழ்நாட்டைச் சேந்தவருமான திரு. வேணுகோபாலும் கலந்துகொண்டு அகதிகளின் குறைபாடுகளை தமிழில் நேரடியாகக்கேட்டறிந்து கொண்டார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் வரவேற்புரை நிகழ்த்துகையில் அகதிகளின் துயர்துடைக்க லயன்ஸ் கழகம் இலவச வைத்திய சேவைகளையும், மற்றும் உதவிகளையும் செய்து தருவதற்கு முன்வந்துள்ளது என்றும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரின் வருகையும் அவர்களின் உதவிகளும் எமது மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுஎன்றும் குறிப்பிட்டார்.

யாழ்.செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் உரையாற்றுகையில் அகதிகளுக்கு உதவுவதற்கும் அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்கி நிவாரணம் வழங்குவதற்கும் எமது யாழ் செஞ்சிலுவைச்சங்கம் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றிவருகின்றது என்றார். சுழிபுரம்பிரஜைகள்குழுத் தலைவரும், யாழ். செஞ்சிலுவைச்சங்க வலி-மேற்கு பிரிவுக்கான பிரதிநிதியுமான திரு இ. விஜயரத்தினம் உரையாற்றுகையில் இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இங்குள்ள அகதிகளின் நிலையை நேரில் பார்வையிட்ட போது மிகவும் நெகிழ்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டனர் என்றும், அவர்களின் உதவிகளை தமிழினம் என்றும்மறக்கமாட்டாது என்றும்குறிப்பிட்டார்

வட்டு லயன்ஸ்கழக பிரமுகரும், அகதிகளுக்கு மண்டபம் நிறுவும்திட்டத்திற்கு பொறுப்பாக இருந்து கடமையாற்றுபவருமான திரு. எப். ஏ துரைசிங்கம், லயன்ஸ்கழக செயலாளர் திரு. மேர்வின்கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினார்கள். புனர்வாழ்வுஅமைப்பின் இணைச்செயலாளர் ஆசிரியர் க. உபேந்திரன் நன்றி கூறினார் இதனை அடுத்து அகதிகளுக்கு இலவச வைத்திய சேவையும் வட்டு லயன்ஸ் கழகத்தினால் நடாத்தப்பட்டது.

---

# பிரபா--ராஜீவ் 75 நிமிட சந்திப்பு

[புதுடில்லி]

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த இரவு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடந்த வெள்ளிக்கிழமை விசேட ஹெலிகொப்டர் மூலம் சுதுமலையில் வைத்து அழைத்துச் செல்லப்பட்ட பிரபாகரன் திரு ராஜீவ் காந்தியை சந்தித்தது இதுவே முதல் தடவையாகும். இச் சந்திப்பு ஒன்றேகால் மணி நேரம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தமிழக முதல்வருடன் புதுடில்லி சென்று, முதல்வர் தமிழகம் திரும்பிய பின்னரும் புதுடில்லியில் தங்கியிருந்த தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனுடன் நேற்று திரு. பிரபாகரன் நீண்ட நேரமாக ஆலோசனை நடத்திய பின்னரே பிரதமரைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது திரு. பிரபாகரனுடன் அவரது ஆலோசகர்களும் இருந்தனர்.

---

### மயிலிட்டி கி. சே. பிரிவிலிருந்து

# இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மயிலிட்டி தெற்கு கிராம சேவகர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து குரும்பசிட்டி, மயிலிட்டி தெற்கு மக்களுக்கு அரசநிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படவிருக்கும் இவ் நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்குரிய அனுமதிப் பத்திரங்கள் எதிர்வரும சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மல்லாகத்தில் உள்ள வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு முன்பாக மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளரால் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இந்திய நிவாரணப் பொருள்களைப் பெறத் தவறிய குரும்பசிட்டி மக்களுக்கு அப்பொருட்களைப் பெறுவதற்குரிய அனுமதிப் பத்திரங்களும் அங்குவைத்து வழங்கப்படவுள்ளதாக மயிலிட்டி தெற்கு பிரசைகள்குழுச் செயலாளர் திரு எஸ் நடராசா அறிவித்துள்ளார்.

[வா]

---

## இன்றைய பலன்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

மகரம்:- உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணியும் நிவர்த்தியாகும்.

கும்பம்:- பகைமூட்டம் தோன்றும், பதட்டம் உடன் சேரும், மிகையான போக்கினாலே மனதும் பாழாய் போகும்.

மீனம்:-இல்லத்தில் மகிழ்ச்சி தோன்றும்,உறவினர்உற்சாகப் படுத்துவர், தானிய விருத்தியுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

---

### மூதூர் இராணுவ நடவடிக்கை:

# 200க்கும் அதிகமான குடும்பங்கள் திருமலைக்கு இடம்பெயர்ந்தனர்

திருமலை நிருபர்

மூதூரில் அண்மையில் மூன்று தினங்களாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து 200 க்கும் அதிகமான குடும்பங்கள் மூட்டை முடிச்சுகளுடன் இடம்பெயர்ந்து அகதிகளாக திருகோணமலைக்கு வந்து சேர்ந்துள்ளனர். இக்குடும்பங்கள் அனைத்திற்கும் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை அபயமளித்து உணவு வழங்கிய பின்னர் பாதுகாப்பாக 'கிளப்பன் பேர்க்' கிலுள்ள அகதி முகாமிற்கு அனுப்பிவைத்துள்ளனர். சம்பூர், சேனையூர், கூனித்தீவு, கட்டைபறிச்சான், தோப்பூர், பச்சைநூர் ஆகிய தமிழ் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களே இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.

சம்பூர் மகாவித்தியாலயயத்தில் புதிதாக இராணுவமுகாமொன்று அமைக்கப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவத்தின் கெடுபிடிகள் அப்பகுதியில் தாங்க முடியவில்லையாம். அதனால் பாதுகாப்புக்கருதிஇடம்பெயர்ந்துள்ளதாக இவர்கள்கூறினார்கள்.

அதேவேளை திருமலை கடற்படைத்தளத்திலிருந்து தினமும் பல தடவைகள் ஹெலிகப்டர்கள் மூதூர் பிரதேசத்துக்குமேலாக பறந்து திரிவதைக்காணக்கூடியதாக இருக்கின்றது.

---

# பரு. நீதிமன்ற கட்டிடம்சேதம்

நெல்லியடி புதன்

வதிரியில் தற்காலிகமாக இயங்கிவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்திற்கு சிறிதுசேதம் ஏற்பட்டுள்ளது ஆனால் அங்கிருந்த வழக்குப் பதிவேடுகள் மறறும் ஆவணங்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை

நீதிமன்றங்கள் இன்னும் சரியாகஇயங்கவில்லை உத்தியோகத்தர்கள் மட்டுமே சென்று தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றனர்

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வசந்தலாதேவி
திருலிங்கநாதன்

மண்ணில்: 27-04-1960
விண்ணில்: 05-08-1985



செல்வி
இந்துசா
திருலிங்கநாதன்

மண்ணில்: 24-03-1985
விண்ணில்: 05-08-1985

பிரான்ஸ் நாட்டில் வசதியான வாழ்வும் படாடோபமும் தெய்வத்தை மறக்கச் செய்யாமையே பெருவியப்பாகும். தலைமகனும் சஞ்சீவ் தமிழ் வளர்ப்பு வளர வேண்டும் என்ற கொள்கையில் பிறந்த மண்ணில் [புங்குடுதீவில்] பெற்றவனைப் பெற்றவர்களோடு வளாவிட்டு அங்கு இறைதந்த செல்வமாம் இந்து சாவினது பிறந்த பேற்று ஆசிபெறச் லூட்ஸ் மாதாவிடம் சென்று வீடுதிருப்புகையில் காலதேவன் கருத்தை முடித்தான் என்பதிலும் கருணைத் தெய்வம் திருவடி சேர்ந்து இன்புறுகிறார்கள் தாயும் சேயும் என்று நினைந்து ஆறத்தலைப் படுதல் ஒன்றே எமக்கு முடிந்ததென்க இணைபிரியாத்தாயினதும் சேயினதும் இரண்டாம் ஆண்டுத் திதியில் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. க. திருலிங்கநாதன் (கணவன்),
செல்வன் திருலிங்கநாதன் சஞ்சீவ் (மகன்),
திரு. திருமதி. ஏரம்பு (பெற்றோர்),
திரு. திருமதி கனகசபை [மாமா மாமி',
சகோதர, சகோதரி,
மைத்துன, மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

12-ஆம் வாட்டாரம்,
புங்குடுதீவு.

(சி 0085)

---

## கலவரம்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கையில்வன்முறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கும் என சந்தேகத்திற்கிடமின்றி நம்புகிறேன்.'

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்படுமுன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

புதியஒப்பந்தம் இந்து சமுத்திர பிராந்தியத்தில் புதியதொரு சூழலை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

---

### ஷெல் தாக்குதல்:

# வயோதிபர் காயம்; வீடுகள் பலத்த சேதம்

பலாலி, வியாழன்

வசாவிளான் மினி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல்தாக்குதல் இடம்பெற்றது.

இச் ஷெல்கள் ஒட்டகப்புலம்,சுதந்திரபுரம்,அச்சுவேலி பகுதிகளில் விழுந்து வெடித்ததில் பல வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

சுதந்திரபுரத்தில் வீட்டில் படுத்திருந்த செ. கந்தபிள்ளை [66 வயது] என்பவர்படுகாயங்களுக்கு இலக்காகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## தட்டுப்பாடு

சுண்டுக்குளி|

யாழ் செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

கடந்தவாரத்துக்கு முந்திய வாரம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட இப்படிவங்கள் ஒருஆளுக்கு ஒன்று என்றவீதம் விநியோகிக்கப்பட்டு தற்பொழுது முடிவடைந்துள்ளன.

இதனால் வெளியில் மீண்டும் இதன்விலை அதிகரித்துள்ளது.

---

# கட்டுவன் அகதிகளுக்கு இந்திய நிவாரண பொருள்

மாவிட்டபுரம், நிருபர்

கட்டுவன் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் வைத்து இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. மோகன் நாராயணன் இவ் வைபவத்தில் கலந்து நிவாரணப் பொருள் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராசா, கட்டுவன் கிராம சேவை அலுவலர் திரு. இ. இராஜயோகன் ஆகியோர் உட்பட மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அரிசி, சீனி, மா, பருப்பு, மண்ணெண்ணை, தீப்பெட்டி. தாவரஎண்ணெய் ஆகியன மேற்படி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

---

# கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை 'யெற்லைன்' விளையாட்டுக்கழகத்தின் 16-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டிகளில் உடுவில் 'சுப்பர்-9' சழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற கோஷ்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. சுப்பிரமணியம் சிவதாசன் பரிசில்களை வழங்கினர். (வி)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 30-7-87

தமிழகத்தில்

# ஞாயிறன்று உடன்படிக்கைப் பிரதி எரிப்புப் போராட்டம்!

## தி. மு. க., காமராஜ் காங்கிரஸ் இணைந்து நடத்தும்

(சென்னை)

இலங்கை - இந்திய உடன் படிக்கையை, தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு தமிழகத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வுடன் படிக்கையின் பிரதிகளை வரும் ஞாயிறன்று எரிக்கப் போவ



தாக தி மு. க.வும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ப. நெடுமாறனும் விடுத்துள்ள அறிக்கைகளில், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையன்று தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வுடன் படிக்கையின் பல பிரதிகளை எரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இந்த உடன் படிக்கையானது இலங் கைத் தமிழ்மக்களுக்கு மிரட்டலாக வந்துள்ளது என திராவிடகழகசெயலர் திரு. வீரமணி தெரிவித்துள்ளார். (ஊ)

## மின் கம்பத்தில் பொம்மைகள்

(சுண்டிக்குளி நிருபர்)

ஆனைக்கோட்டையில் நேற்று மின் கம்பத்தில் ஐந்து பொம்மைகள் கட்டப்பட்டிருந்தன.

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய பின்வீதியில் வரிசைக்கிரமமாகக் கட்டப் பட்டிருந்த பொம்மைகளுக்கருகில் 'இனத் துரோகிகள்' என்ற சுலோக அட்டையும் தொங்க விடப்பட்டிருந்தன. (ஓ)

## சென்னையில் விழா

[சென்னை]

இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் முகமாக விழாவொன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெறவுள்ளது.

மெரினு கடற்கரையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதமர் ராஜீவ் காந்தி கலந்து கொள்வார். [ஊ]

## முன்னேற முயன்ற படையினரை புலிகள் தாக்கித் திருப்பினர்

(மாவிட்டபுரம் நிருபர்)

மாவிட்டபுரத்தில் நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகமும் ஷெல் தாக்குதல்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

மாவிட்டபுரம் சந்தியில் இருந்து சிறிது நகர முயன்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும் நடத்தவே புலிகளும் எதிர்தாக்குதல் நடத்தித் திருப்பினர்.

சிலநிமிட நேரம் அப்பகுதியில் தொடர்ந்து வெடிச் சத்தம் கேட்டது.

## ஒப்பந்தத்தை புலிகள் ஆதரிப்பார்கள்! - ராஜீவ் நம்பிக்கை

[கொழும்பு]

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது கருத்தை மாற்றிக்கொண்டு இந்த ஒப்பந்தத்தை ஆதரிப்பார்கள்'' என்று நம்புகிறேன்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்று இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறினர்.

தொடர்ந்து பேசிய அவர், ஆயுதங்களை மீண்டும் ஒப்படைத்த பின்பு தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அவர்களின் அச்சத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பேச்சுக்கள் மேற்கொள்ளப்படும் என்று கூறினர்.

இந்தியாவில் அகதிகள் முகாம் மட்டுமேயுள்ளன. போராளிகளுக்கு பயிற்சியளிக்கும் முகாம் எதுவும் அங்கில்லை என்று கூறிய பிரதமர் காந்தி இந்த ஒப்பந்தம் இந்திய உபகண்டத்தில் அமைதியை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கும் என்ருர்.

மேலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேநிலவி வந்த கருத்து வேறுபாடு என்னும் கருமேகம் விலகி இருநாடுகளும் முன்னேற வழியேற்பட்டுள்ளதுடன் இந்தியாவிலிருக்கும் தமிழ் அகதிகள் கௌரவமாக நாடுதிரும்ப வழி ஏற்பட்டுள்ளது என்ருர். (எ)

## உடன் படிக்கைக்கு றேகன் வரவேற்பு

(வாஷிங்டன்)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமெரிக்க ஜனதிபதி றெனல்ட் றேகன் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு அனுப்பியுள்ள விசேஷ செய்தியொன்றில் சிக்கலான இப் பிரச்னைக்கு அமைதி வழியில் தீர்வுகண்டதையிட்டு பாராட்டுத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தேவைப்படும் உதவிகளைச் செய்ய அமெரிக்கா தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [ஊ]

## விமான நடமாட்டம் தீவிரம்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் நேற்று அடிக்கடி விமானங்கள் பறந்த வண்ணமிருந்தன.

தென்னிலங்கையில் பதற்ற நிலை தோன்றியிருப்பதனல் அதனைச்சமாளிக்க வடக்கிலிருந்து மேலதிக ராணுவத்தினரை வரவழைக்கவே இவ் விமானங்கள் வந்து போவதாக கருதப்படுகிறது.

இவை சிலசமயங்களில் மிகத் தாழ்வாக பறந்ததினல் மக்களிடையே அச்சஉணர்வும தோன்றியது. (ஊ)

## நிவாரணப்பொருள் விநியோகம்: மோசடி கண்டுபிடிப்பு சம்பந்தப்பட்டவர் தப்பிஓட்டம்

உருப்பராய், புதன்

நிவாரணப்பொருள்கள் விநியோகத்தில் நடத்தப்பட்ட மோசடி கையும்மெய்யுமாக அகப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபர் சைக்கிளில் ஏறி தப்பித்துக்கொண்டார்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க திருநெல்வேலிக் கிளையில் நேற்று முன்தினம் நடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது: நானூறு ரூபாய் பெறுமதியான நிவாரணப் பத்திரத்துடன் நல்லூர் கூட்டுறவுக் கிளைக்கு நபரொருவர் வந்துள்ளார். அவர்கொண்டு வந்த நிவாரணப்பத்திரத்தில் சந்தேகம்கொண்ட கிளை முகாமையாளர் அதனை சோதனையிட்டபொழுது அப்பத்திரம் போலியானதென கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட நபரை கிளை முகாமையாளர் விசாரணைக்குட்படுத்திய பொழுது அந்நபர் சாதுர்யமான முறையில் தனது சைக்கிளில்ஏறித்தப்பித்துக்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து யாழ். அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் போலிப்பத்திரம் தயார்செய்த சூத்திரதாரியை கண்டுபிடிக்கும் பணியிலும் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். [ரா]

தலைவர் பிரபா மீது

## இராஜிய அழுத்தத்தை இந்தியா மேற்கொண்டுள்ளது -புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ விடுதலைப்புலிகளின்தலைவர் வே.பிரபாகரன் தமிழீழ மக்களின் இலட்சியத்திலிருந்து சிறிதளவும்பின்வாங்காது உறுதியாக இருந்துவருவதைத் தொடர்ந்து இந்திய அரசு அவர் மீது மிகவும் கடுமையான இராஜதந்திரஅழுத்தத்தை மேற்கொண்டுள்ளது. இத்தகைய ஒரு அழுத்தமான சூழ்நிலையில் தலைவர் கருத்துக்கள் தொடர்பாக பத்திரிகைகள் வானெலி உட்பட வெகுஜன தொடர்பு சாதனங்கள் வெளியிடும் கருத்துக்களை தமிழீழ மக்கள் நம்ப வேண்டாம். நேரடியாக தமிழீழமக்களுக்கு தலைவரினல் விடுவிக்கப்படும் நேரடிச்செய்திகளை மட்டுமே ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகிறோம்''.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், இந்த அடிப்படையில் இந்திய - இலங்கை அரசுகளிடையே நேற்று நடைபெற்ற ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் திருப்தி தெரிவித்ததாக இந்திய - இலங்கை வெகுஜன தொடர்பு சாதனங்களின் செய்தி அப்பட்டமான பொய் எனவும் தமிழீழ - தமிழக மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக ஒருபக்க சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிவாரணப் பத்திரம் நாளை வழங்கப்படும்

(மாவிட்டபுரம் நிருபர்)

மயிலிட்டிக்கரை கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த தொடர்ந்தும் அப்பகுதியிலேயே வசித்து வருகின்ற மக்களுக்கு இந்திய நிவாரணத்திற்கான அனுமதிப்பத்திரம் நாளை வெள்ளிக்கிழமை மயிலிட்டியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மயிலிட்டிக்கரை கிராம சேவையாளர் த. சண்முநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

## மரண அறிவித்தல்

**க. வி. கதிர்வேலு**
**(Chartered Accountant)**



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணக்காளர் க. வி. கதிரவேலு 28-07-87ல் காலமானர். இவர் காலஞ்சென்ற தங்கமணி அம்மாளின் அன்புக் கணவரும், ஞானசம்பந்தபிள்ளை (அக்கிறி கோலாஸ்), ஞானேஸ்வரி, ராஜேஸ்வரி, மங்கையர்க்கரசி, குமரேசர் (மலேசயா), சரவணப் பெருமாள் (கணக்காளர், கொழும்பு), சவுந்தரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாவதி, உருத்திரசிகாமணி, சிதம்பரநாதன், ஜயகணேசன், லட்சுமி மலேசியா), ஞானம்பிகை, யோகச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனுமாவார். ஈமைக்கிரியைகள் 30-07-87 பிற்பகல் 4-00 மணிக்கு சிறுப்பிட்டி வடக்கு, மடத்தடி வீதியில் உள்ள மு. அருள்பிரகாசத்தின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அவ்வூர் மயானத்திற்கு கொண்டுசெல்லப்படும். உற்ருர், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- க. ஞானசம்பந்தபிள்ளை

[சி-0098]

## 'பிரேமா' 'லலித்' பகிஷ்கரிப்பு?

[கொழும்பு]

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் இலங்கை விஜய வைபவங்கள் எவற்றிலும் பிரதமர் பிரேமதாஸாவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் கலந்துகொள்ளவில்லை.

பிரதமர் காந்தியும் அவர் குழுவினரும் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்த போதோ அல்லது ஜனதிபதி மாளிகைக்கு அவர் சென்ற போதோ ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவங்களிலோ மேற்படி பிரதமரும், அமைச்சரும் கலந்துகொள்ளவில்லை.

'இலங்கையின் உள்நாட்டு இனப்பிரச்னையைத் தீர்க்க இந்தியப் பிரதமர் இங்கு வர வேண்டியதில்லை' என்று பிரதமர் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone, — 22389, 24126.